# தொழிற்கல்வி கற்குமிடத்தை தேடல்: நீ எவ்வாறு திறமையாக நடந்துகொள்ளலாம்?

## தொழிற்குறிக்கோளை தெளிவாக்கு

நீ தொழிற்கல்வி கற்குமிடத்தை தேடும்போது, உனது தொழிற்தெரிவு நிறைவு செய்யப்பட்டிருக்கவேண்டும். வேறு வகையில் சொல்வதானால்: நீ என்ன ஆக விரும்புகின்றாய் என்பது உனக்குத் தெரியும். முக்கியமானதும், நீ உன்னை அனுமதி அளிக்கவேண்டியதும் யாதெனில் குறிக்கோளுடன் தேடல், திட்டமில்லாமல் தேடுவதும் கிடைக்கும் தொழிற்கல்வி கற்குமிடங்களில் திறமானதை எடுத்துக்கொள்வது என்பதும் தவறு.

## முகவரிகளைப் பெறு

இப்பொழுது நீ எந்நிறுவனத்தில் அடுத்த கோடைகாலத்தில் உனது விருப்பத் தொழிலைக் கற்பதற்குரிய இடம் வெற்றிடமாக உள்ளது என்பதை அறிந்துகொள்ளவேண்டும். இதற்கு நீ உபயோகிப்பதற்காக பலவித சாத்தியங்களும், உதவிகளும் உள்ளன:

- தொழிற்கல்வி ஆலோசனை நிலையத்தில்[1] தொழில் கற்கவுள்ளவர்கள் அவர்கள் கற்கவிரும்பும் தொழில்களைக் கற்ககூடிய தொழில் நிறுவனங்களின் முகவரிப் பட்டியலைக் காணலாம்.
- தொழிற்கல்வி கற்குமிடங்களின் வெற்றிடவிபரம் இணையத்தில் இருந்து பெற்றுக்கொள்ளலாம்.
- தினசரிப் பத்திரிகைகளிலும், இலவச அறிவிப்புகளிலும் தொழிற்கல்வி கற்குமிட விபரத்தை நீ காணலாம்.
- அநேகமான மாணவர்கள் தங்களுக்குத் தெரிந்தவர்கள் அல்லது உறவினர்கள் மூலமாக தொழிற்கல்வி கற்குமிடத்தைப் பெறுவர். இவ்வாறான தொடர்புகளையும் பயன்படுத்து.

## தொடர்பை ஏற்படுத்து

இப்பொழுது உன்னிடம் முகவரிகள் உள்ளன. இந்த தொழில் நிறுவனங்களில் உண்மையில் தொழிற்கல்வி கற்குமிடம் வெற்றிடமாக உள்ளதா என்பதை விசாரி. உனது முதலாவது தொடர்பை தொலைபேசியூடாக மேற்கொள் அல்லது நேரடியாகச் செல். மேலும் நீ எவ்வாறு விண்ணப்பிக்க வேண்டும் என்று சாதகமான முறையில் கேள். இது நிறுவனத்திற்கு நிறுவனம் மாறுபடும். ஒரு நிறுவனம் எழுத்து மூலமான விண்ணப்பத்தை விரும்பும், மற்றொன்று சிலவேளைகளில் உன்னை பிரத்தியேகமாக அறிந்துகொள்ள விரும்பும். முக்கியமானது என்னவென்றால், நீ அந்த நிறுவனம் கேட்கும் வகையில் விண்ணப்பிப்பது.

---

1

ஒவ்வொரு மாநிலத்திலும் ஆகக்குறைந்தது ஒரு தொழில் ஆலோசனை இருக்கும். முகவரிகளை பாடசாலையில், கிராமசபையில் அல்லது பின்வரும் இணையத்தில் பெற்றுக்கொள்ளலாம். www.svb-asosp.ch

தொழிற்கல்வி ஆலோசனை நிலையம் பொருவாக ஒரு விசேட பெயரில் அல்லது அதன் சுருக்கத்தில் நன்றாக அறியப்பட்டிருக்கும்:

| | |
|---|---|
| சுவிசின் ஜெர்மன்மொழி பேசும் பகுதியில் | BIZ, Laufbahnzentrum |
| சுவிசின் பிரெஞ்சுமொழி பேசும் பகுதியில் | OP, OSP, OROSP, CIO, CIP, OOFP |
| சுவிசின் இத்தாலிமொழி பேசும் பகுதியில் | orientamento, UOSP |

### விண்ணப்பம் செய்

ஒரு எழுத்துமூலமான விண்ணப்பத்தை முன்னரோ, பின்னரோ ஒவ்வொரு நிறுவனமும் கேட்கும். ஒரு எழுத்துமூலமான விண்ணப்பம் எவ்வாறு இருக்கவேண்டும் என்றும், அதனுள் எவ்விடயம் இருக்கவேண்டும் என்றும் தெளிவான விதிமுறைகள் உள்ளன. எவ்வாறு ஒருவர் எழுத்துமூலம் விண்ணப்பிக்க வேண்டும் என்று நீ பாடசாலையில் அல்லது சிலவேளைகளில் உனது பெற்றோரிடம் இருந்து கற்றிருப்பாய். உனக்கு நிச்சயமில்லாது விடில் உதவியை தேடு. உதாரணமாக தொழிற்கல்வி ஆலோசனை நிலையத்தில் உனக்கு எழுத்துமூலமான விண்ணப்பத்திற்கு ஆலோசனையும், மாதிரிக் கடிதங்களும் வழங்கப்படும். இன்னுமொரு குறிப்பு: இயலுமாயின் ஒரே நேரத்தில் பல இடங்களிற்கு விண்ணப்பி. இதனூடு நீ உனக்கு ஒரு தொழிற்கல்வி கற்குமிடத்தை பெறும் சந்தர்ப்பத்தை அதிகரிக்கின்றாய்.

### கண்ணோட்டத்தை வைத்திரு

நீ உனது அனைத்து விண்ணப்பம் செய்த விபரங்களையும் சரிபார்த்து வைத்திருப்பது உபயோகமானது. இதன் அடிப்படையில் நீ ஒரு பட்டியலை தயார்செய்து, எப்பொழுது நீ விண்ணப்பித்தாய், இங்கு ஒரு குறித்த நேரம் கேட்கப்பட்டதா, எப்பொழுது வரையும் உனக்கு ஒரு அறிவித்தல் தரவிரும்பினர் போன்ற விபரங்களைக் குறித்து வை. இதனால் நீ என்ன செய்யப்பட்டது, யாரிடம் இருந்து ஒரு பதிலை எதிர்பார்க்கின்றாய், எப்பொழுது திரும்ப விசாரிக்கலாம் என்பவற்றை எப்பொழுதும் அறிந்து வைத்திருப்பாய்.

### பரீட்சைகளும், கற்பிப்போருடன் கதைத்தலும்

இப்பொழுது அதிகமாக நிறுவனங்களும், சம்மேளனங்களும் நீ ஒரு ஒத்துப்போகும் பரீட்சையை செய்துள்ளாயா என்று கேட்கின்றன. உனது விரும்பத்துக்குரிய தொழிலுக்கு இது எவ்வாறு உள்ளது என்பதை விசாரித்து அறிந்துகொள்.
நீ ஒருசிலரில் இருந்து தெரிவாகியிருந்தால், அதன் தலைவர் அல்லது தலைவி உன்னை பிரத்தியேகமாக அறிய விரும்புவார். இந்த அறிமுக கலந்துரையாடலுக்கு உன்னைத் தயார்ப்படுத்து. சாத்தியமான கேள்விகளையும், பதில்களையும் நினைத்துக்கொள். உனக்கு நிச்சயமில்லாவிட்டால் யாரிடமாவது கதைத்துக்கொள். இந்த கலந்துரையாடலில் நீ விட்டு வைக்கும் உன்னைப்பற்றிய பிரத்தியேக அபிப்பிராயம் ஒரு முக்கிய பங்கை வகிக்கும். எனவே உன்னை நல்ல முறையில் விற்பனைசெய். உனக்கு ஆர்வமுள்ளதாகவும், ஊக்கமுள்ளதாகவும் காண்பி.

### மறுப்பிற்கு தாயர்படுத்து

தொழிற்கல்வி தேடுமிட நிலைமைகள் பல தொழில்களுக்கு கடுமையாக உள்ளது. எனவே நீ உனது விண்ணப்பத்திற்கு மறுப்பு கிடைக்கலாம் எனவும் கணக்கிட்டுக்கொள்ளவேண்டும். இதனால் நீ ஒருபோதும் தைரியத்தை இழக்கக்கூடாது. நீ மாற்றமில்லாமல் இருப்பதுடன், உனது முயற்சியை தொடர்ந்து கடைப்பிடி. எக்காரணத்திற்காக மறுக்கப்பட்டது என்பதை முடிந்தவரை அறிந்துகொள். எதிர்காலத்தில் நீ அதைத் திருத்திக்கொள்ளமுடியும் அத்துடன் உனது வெற்றிக்கான சந்தர்ப்பத்தையும் அதிகரிக்கமுடியும்.

### இசைந்துகொடுக்கும் தமையுடன் இரு

ஒரே ஒரு தொழிலில் மட்டும் உன்னை நீ கடினமாக ஈடுபடுத்தக் கூடாது. சிலவேளைகளில் உனது விரும்பமான தொழிலைக் கற்குமிடம் கண்டுபிடிக்கமுடியாமல் இருக்கலாம். இப்பொழுது நீ வேறொரு தீர்விற்கு தயாராகவிருப்பது முக்கியமானது.
உன்னுடைய விருப்பமான தொழிலை கடினமுயற்சியுடன், நீண்ட காலம் தேடியும் கிடைக்கவில்லை எனில், அவசியம் அதன் நிலைமையை கவனமாக ஆராயவேண்டும். இதனோடு தொடர்புடைய வேறு தொழில், ஒரு இடைப்பட்ட வருடம், பயிற்சிவருடம் அல்லது ஒரு மொழிகற்கும் வருடம் போன்ற சந்தர்ப்பங்களை பரீட்சித்துப் பார். உரிய நேரத்தில் செயற்படு மற்றும் தேவையான தகவல்களை அல்லது உதவியைப் பெற்றுக்கொள். முடிந்தவரை உனது தொழிற்கல்வி ஆலோசகருடன் கதைத்துக்கொள் அத்துடன் உனது தொடரும் நடவடிக்கைகளைத் திட்டமிடு. இவ்வாறு நடக்கும் போது நீ உனது தொழிற்தெரிவில் ஓர் அடி முன்னுக்கு வருவாய்.